இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 170 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – தை 17 – சனிக்கிழமை 31 ஜனவரி 2026 – கோவை ★★ 16 + 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 170 : Thiruvalluvar Year - 2057 - Thai 17 - Saturday 31 January 2026 - Kovai ★★ 16+12 Pages ₹ 5.00

### ஜவுளி நிறுவனங்களின் நெசவு, பின்னலாடைத் தொழில்களுக்கு

# நவீன இயந்திரங்களைக் கொள்முதல் செய்ய 20% மானியம்!

## கோவை - சர்வதேச ஜவுளித் தொழில் மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி உரையில் அறிவிப்பு!

**சென்னை, ஜன. 31-**

**“ஜவுளி நிறுவனங்கள் நெசவு, பின்னலாடைகளுக்கு நவீன இயந்திரங்களைக் கொள்முதல் செய்ய இருபது சதவிகித மூலதன முதலீட்டு மானியம் வழங்கப்படும்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கோவையில் நடைபெற்ற “முதலாவது சர்வதேச ஜவுளித் தொழில் மாநாடு 360”-ல் காணொலியில் உரையாற்றும் போது கூறினார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.1.2026) முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக கோயம்புத்தூர் மாநகரின் கொடீசியா வளாகத்தில், தமிழ்நாடு அரசின் துணிநூல் துறை மற்றும் இந்திய தொழில் கூட்டமைப்பு ஆகியவை இணைந்து நடத்தும் “முதலாவது சர்வதேச ஜவுளித் தொழில் மாநாடு 360”இல், ஆற்றிய உரை வருமாறு:-

தொழில் வளத்திற்கும் புதுமையான கண்டுபிடிப்புகளுக்கும் புகழ்பெற்ற தென்னிந்தியாவின் மான்செஸ்டரான கோவையில், சர்வதேச ஜவுளித் தொழில் மாநாடு முதன்முறையாக நடைபெறுவதில் மகிழ்ச்சியடைகிறேன்! இந்தியாவின் இரண்டாவது பெரிய பொருளாதாரம் கொண்ட மாநிலம் நம்முடைய தமிழ்நாடு. அதுவும், தமிழ்நாட்டின் தனிச்சிறப்பு என்னவென்றால் இங்கு சமூகநீதியும் காப்பாற்றப்படுகிறது; அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய பரவலான வளர்ச்சியையும் சாதித்து காட்டிக்கொண்டு இருக்கிறோம்!

### தமிழ்நாட்டிற்குப் பெருமை!

அதனால்தான், நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில், ஆட்டோமொபைல், ஐ.டி., காலணி உற்பத்தி, மின்னணுப் பொருட்கள் உள்ளிட்ட பல துறைகளிலும் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு உயர்ந்திருக்கிறது!

அதுவும், ஜவுளித்துறையை பொறுத்தவரையில், ஆயத்த ஆடை ஏற்றுமதியில் தொடர்ந்து 5 ஆண்டுகளாக, ‘இந்தியாவின் மிகப்பெரிய ஏற்றுமதியாளர்’ என்ற பெருமையை தமிழ்நாடு பெற்றிருக்கிறது.

இந்தியாவின் ஜவுளி வணிகத்தில் தமிழ்நாட்டின் பங்கு மட்டும் 33 விழுக்காடு! நேரடியாக, 31 இலட்சம் தொழிலாளர்களுக்கு தமிழ்நாட்டின் ஜவுளித்துறை வேலைவாய்ப்பு வழங்குகிறது. இதில், 60.12




விழுக்காடு பெண் தொழிலாளர்கள் என்பது கூடுதல் சிறப்பம்சம்.

### மாநாட்டின் முக்கிய நோக்கங்கள்!

நம்முடைய திராவிட மாடல் ஆட்சி அமைந்ததும் துணிநூல் துறை என்று தனித் துறையையே உருவாக்கினோம். தொழில்நுட்ப ஜவுளித்துறையில் முதலீடுகளை ஈர்க்க சென்னை மற்றும் கோவையில் இரண்டு கருத்தரங்குகளை நடத்தினோம். இப்படி, பல முயற்சிகளை எடுத்து இந்த துறையின் வளர்ச்சிக்கு உழைக்கும் அமைச்சர் ஆர்.காந்தி அவர்களுக்கும், துறை அதிகாரிகளுக்கும் என்னுடைய பாராட்டுகள்! வாழ்த்துக்கள்!

இந்த மாநாட்டில் துணை முதலமைச்சர் தம்பி உதயநிதி அவர்கள் தொடங்கி வைத்திருக்கிறார். இந்த துறையின் வளர்ச்சிக்காக, நம்முடைய அரசு இதுவரை செய்திருக்கும் திட்டங்கள், சலுகைகள், சாதனைகளை எல்லாம், அவர் உங்களிடம் விரிவாக பகிர்ந்துகொள்வார். அந்த சாதனைகளின் தொடர்ச்சியாக, இந்த மாநாடு மூலமாக தமிழ்நாட்டில் ஜவுளித் துறையின் வலுவான கட்டமைப்பு பற்றி உலக வாடிக்கையாளர்களுக்கு சென்று சேர வேண்டும்! சர்வதேச முதலீடுகளை ஈர்க்க வேண்டும்! இது தான் இந்த நிகழ்வின் முக்கிய நோக்கங்கள்.

அமெரிக்கா விதித்திருக்கும் 50 விழுக்காடு வரியால் பெரிய அளவில் தமிழ்நாடு பாதிக்கப்பட்டிருக்கிறது. அதில் இருந்து மீண்டு, புதிய சந்தைகளை கண்டறிவது, வாங்குவோர் - விற்போர் சந்திப்பு நடத்துவது, பருத்திக்கான 11 விழுக்காடு இறக்குமதி வரியை நீக்குவதற்கு ஒன்றிய அரசை வலியுறுத்துவது போன்ற பல முயற்சிகளை நாம் செய்து வருகிறோம்!

இந்தியா - ஐரோப்பிய யூனியன் இடையே வர்த்தக ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ள நிலையில், இந்த மாநாடு மேலும் முக்கியத்துவம் பெறுகிறது! ஜவுளித் தொழிலுக்கான கண்காட்சி, ஃபேஷன் ஷோ, வாங்குவோர் - விற்போர் சந்திப்பு, கருத்தரங்குகள், விருதுநகரில் அமையவுள்ள PM மித்ரா ஜவுளிப் பூங்கா தொடர்பான ‘ரோடுஷோ’ ஆகியவை நடைபெற இருக்கிறது.

### ரூ.915 கோடியில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்!

அண்மையில், கோவை, மதுரை, தூத்துக்குடியில் நடைபெற்ற முதலீட்டாளர் மாநாடுகள் மூலமாக, ஜவுளித்தொழிலுக்கு மட்டும் 9 ஆயிரத்து 764 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகளுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திட்டு இருக்கிறோம். இந்த மாநாட்டிலும், 915 கோடி ரூபாய் மதிப்பிலான 55 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட இருக்கிறது!

அதுமட்டுமல்ல, தமிழ்நாட்டின் ‘ஒருங்கிணைந்த புதிய ஜவுளிக் கொள்கை 2025-2026’ யையும் இன்றைக்கு வெளியிடப்பட்டிருக்கிகிறது. பல்வேறு வேலை பளு காரணமாக நேரில் வந்து உங்களை சந்திக்க முடியவில்லையென்றாலும், உங்களுக்கான ஒரு சிறப்பு அறிவிப்பை வெளியிட விரும்புகிறேன்.

### 20 சதவிகித மூலதன முதலீட்டு மானியம்!

பல்வேறு தரப்பினரின் கோரிக்கையை ஏற்று ஜவுளி நிறுவனங் களுக்கு, அதிநவீன நெசவு மற்றும் பின்னலாடை இயந்திரங்களை கொள்முதல் செய்ய 20 விழுக்காடு மூலதன முதலீட்டு மானியம் வழங்கப்படும். இதற்காக, ஆண்டுதோறும் 30 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்!

அதேநேரத்தில், இந்த மாநாட்டில் கூடியிருக்கும் இந்தியா மற்றும், வெளிநாடுகளை சேர்ந்த தொழில் முனைவோர்களுக்கு ஒரு வேண்டுகோளையும் வைக்க விரும்புகிறேன்.

மிகச்சிறந்த உட்கட்டமைப்பைக் கொண்ட தமிழ்நாட்டில் முதலீடு செய்து, நீங்களும் வளர்ந்து, தமிழ்நாட்டிற்கும் வேலைவாய்ப்புகளை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் எனும் திராவிட மாடலின் பெருங்கனவில், ஜவுளித் தொழில் கணிசமான பங்கு வகிக்க வேண்டும். இந்த மாநாட்டின் வெற்றி அதற்கு பெரிதும் உதவும் என்று தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



**நம்முடைய திராவிட மாடல் ஆட்சி அமைந்ததும் துணிநூல் துறை என்று தனித்துறையையே உருவாக்கினோம். தொழில்நுட்ப ஜவுளித் துறையில் முதலீடுகளை ஈர்க்க சென்னை மற்றும் கோவையில் இரண்டு கருத்தரங்குகளை நடத்தினோம். இப்படி, பல முயற்சிகளை எடுத்து இந்த துறையின் வளர்ச்சிக்கு உழைக்கும் அமைச்சர் ஆர்.காந்தி அவர்களுக்கும், துறை அதிகாரிகளுக்கும் என்னுடைய பாராட்டுகள்! வாழ்த்துக்கள்!**

---

### யு.ஜி.சி. விதிகள்: அமைப்பு ரீதியான குறைகளைக் களையும் வகையில் திருத்தி

# முறையான நடவடிக்கைகளை எடுத்துச் செயல்படுத்த வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, ஜன. 31-**

**உயர்கல்வி நிறுவனங்களில் சமத்துவ ஊக்குவிப்பு தொடர்பான யு.ஜி.சி. விதிகள் 2026-யை வரவேற்றுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இந்த விதிகளை மேலும் வலுப்படுத்துவது மட்டுமல்லாமல், அதில் உள்ள அமைப்பு ரீதியான குறைகளைக் களையும் வகையில் திருத்தி அமைக்க வேண்டும் என்றும் முறையாக நடவடிக்கைகளை எடுக்கும் வகையில் செயல்படுத்திட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.**

இதுதொடர்பாக முதலமைச்சர் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

UGC (உயர்கல்வி நிறுவனங்களில் சமத்துவ ஊக்குவிப்பு) விதிகள், 2026 தாமதமான நடவடிக்கை என்றாலும், பாகுபாட்டிலும், நிறுவனங் களின் அக்கறையின்மையிலும் தோய்ந்துபோன உயர்கல்வி அமைப்பினைச் சீர்ப்படுத்துவதை நோக்கிய வரவேற்கத்தக்க நகர்வாகும்.

ஒன்றிய அளவில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்ததில் இருந்து, இந்திய உயர்கல்வி நிறுவனங்களில் மாணவர் தற்கொலைகள், குறிப்பாகப் பட்டியல், பழங்குடியின மாணவர்களின் தற்கொலைகள் அதிகரித்திருப்பது கண்கூடு. மேலும், தென்னிந்திய மாநிலங்கள் - காஷ்மீர் - சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களைக் குறிவைத்து மீண்டும் மீண்டும் தாக்குதல் சம்பவங்களும் தொல்லைக்குள்ளாக்குவதும் நடத்தப்பட்டு வருகின்றன. இத்தகைய சூழலில், சமத்துவப் பாதுகாப்பு நடவடிக்கைகள் என்பவை தவிர்க்க முடியாத கட்டாயமாகும். அதில் இருவேறு கருத்துக்கு இடமிருக்க முடியாது.

### மைய நோக்கங்களை நீர்த்துப் போகச் செய்யக் கூடாது!

யு.ஜி.சி. புதிய விதிகளில் சாதியப் பாகுபாட்டை ஒழிப்பதும், அச்சட்டத்துக்குள் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் பாதுகாப்பு வழங்கப்பட்டிருப்பதும் ஆதரிக்கத்தக்கது. மண்டல் குழு பரிந்துரைகளின் அடிப்படையில் இட ஒதுக்கீட்டை அமல்படுத்தியபோது போராட்டம் நடத்திய அதே பிற்போக்கு மனநிலையுடன்தான் யு.ஜி.சி. விதிகளுக்கு எதிரான தற்போதைய போராட்டங்களும் அமைந்துள்ளன. இத்தகைய அழுத்தங்களுக்கு ஆட்பட்டு, ஒன்றிய அரசு இந்தப் புதிய விதிகளையோ அல்லது அவற்றின் மைய நோக்கங்களையோ நீர்த்துப் போகச் செய்யக் கூடாது.

ரோகித் வெமுலா அவர்களின் தற்கொலை போன்ற வழக்குகளில், துணைவேந்தர்கள் மீதே குற்றம் சாட்டப்பட்டிருந்த நிலையில், யு.ஜி.சி. புதிய விதிகளின்படி உயர்கல்வி நிறுவனத் தலைமைப் பொறுப்பில் இருப்பவரின் தலைமையிலேயே சமத்துவக் குழுக்களை அமைத்தால் அவை எப்படி சுதந்திரமாகச் செயல்பட முடியும் என்ற கேள்வி எழுகிறது. அதுவும் பல உயர்கல்வி நிறுவனங்களின் தலைமைப் பொறுப்பில் ஆர்.எஸ்.எஸ். ஆதரவாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கும்போது இக்கேள்வி மேலும் வலுவடைகிறது.

மாணவர்களின் தற்கொலைகளைத் தடுப்பது, பாகுபாடுகளை முடிவுக்குக் கொண்டு வருவது, பிற்படுத்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களின் இடைநிற்றலைக் குறைப்பது ஆகியவற்றில் ஒன்றிய பா.ஜ.க. அரசு உண்மையாகவே தீவிரமாக இருந்தால், இந்த விதிகளை மேலும் வலுப்படுத்துவது மட்டுமில்லாமல், அதில் உள்ள அமைப்புரீதியான குறைகளைக் களையும் வகையில் திருத்தியமைக்க வேண்டும். முறையாக நடவடிக்கைகளை எடுக்கும் வகையில் செயல்படுத்திட வேண்டும்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தி பதிவிட்டுள்ளார்.